Registered as a Newspaper    பக்கங்கள் 04    விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    புரட்டாதி 26    (12-10-1993)    செவ்வாய்க்கிழமை    ஓசை 236

## போலி ஆவணங்களோடு பிடிபடுவோரில் 39 சதவீதமானோர் இலங்கையர்

சிங்கப்பூரில் மோசடிப் பயண பத்திரங்களுடன் சிக்கும் அகதிகளில் 39 சதவீதமானவர்கள் புகலிடம் கோரி வெளிநாடுகளுக்குச் செல்லும் இலங்கையர்களாவர். சிங்கப்பூர் விமான சேவை நிறுவனத்தின் துணை அமைப்பான சிங்கப்பூர் விமான நிலையப் புலனாய்வு, பந்தோபஸ்து சேவை பிரைவேட் லிமிட்டெட் இத் தகவலை தெரிவித்துள்ளது. மேற்கு நாடுகளுக்குச் செல்ல உண்மையான கடவுச் சீட்டையும் பயண ஆவணங்களையும் வழங்குவதாகக் கூறித் தரகர்கள் பெருந்தொகைப் பணத்தைக் கறக்கின்றனர் என்றும் இந் நிறுவனம் தெரிவித்துள்ளது. ஆனால் சிங்கப்பூர் விமான நிலையத்தில் கடின தேடுதல் மற்றும் பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் போலிப் பயண ஆவணங்களுடன் செல்லும் பலர் சிக்கிக்கொள்கின்றனர். இப்படிச் சிக்கிக் கொள்பவர்கள் சிறைவாசம் அனுபவிக்கின்றனர். 1991 யூன் மாதத்திற்கும் 1992 யூலைக்குமிடையில் சிங்கப்பூரில் போலிப்பயண (4 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் புலனாய்வு துறையின் சிறப்பே இராணுவத்தினரின் தோல்விக்கு காரணம்!

## செஞ்சிலுவை உதவியுடன் 40 பேர் தீவகம் செல்வர்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு, அனலைதீவு, மாதகல் மற்றும் இளவாலைப்பகுதிகளிற்கு சுமார் 40 பேர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் செல்லவுள்ளனர்.

இதற்கான அனுமதியை சிறிலங்கா பாதுகாப்பு நடவடிக்கைக்குழு வழங்கியுள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைச்சங்க வட்டாரங்கள் தெரிவித்தன இவர்கள் ''குமண'' கப்பல் மூலம் அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

மேற்படி 40 பேரும் கடந்த மாதம் 20ஆம் திகதி மேற்படி பகுதிகளிற்குச்செல்ல சிறிலங்க பாதுகாப்புநடவடிக்கைக் குழு அனுமதி மறுத்ததைத் தொடர்ந்து வீடு திரும்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

[பா], [நி]

### புள்ளிகளில் மோசடி செய்து நியமனம்பெற்ற

## 34 ஆங்கில ஆசிரியர்கள் தற்காலிக வேலை நீக்கம்

(கொழும்பு)

34 ஆங்கில ஆசிரியர்கள் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். 1992 ஆம் ஆண்டில் நடைபெற்ற பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்பட்ட 34 பயிலுனர் ஆசிரியர்களின் நியமனம் நிறுத்தப்பட்டுள்ளது. ஆசிரியர் பரீட்சைகளின்போது புள்ளிகளில் மோசடி செய்யப்பட்டதாக கூறப்படுவது பற்றி சி.ஐ.டியினர் நடாத்திய விசாரணையின் பின்பே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கூடுதலானபுள்ளிகளை இடுவதற்காக பரீட்சைத் திணைக்கள அதிகாரிகள் பரீட்சார்த்திகளிடமிருந்து 30,000 ரூபா முதல் 50,000 ரூபா வரை பணம் பெற்றுக்கொண்டதாகச்சொல்லப்படுகிறது.

இவ்வாறு மோசடி மூலம் மேலும் எவராவது ஆசிரியர் பதவி பெற்றுள்ளனராஎன்பது குறித்து விசாரணைகள் நடைபெற்றுவருவதாகச் சொல்லப்படுகிறது.

### சேவையிலிருந்து ஓய்வு பெறுவோர்

## போலியான அறிவிப்புகளுக்கு புலிகள் ஏமாறவில்லை

[கொழும்பு]

**'ஒப்பரேசன் யாழ்தேவி' இராணுவ நடவடிக்கையானது விடுதலைப் புலிகளுக்கு ஆச்சரியம் அளிக்கும் ஒன்றாக இருக்கவில்லை. இவ் இராணுவ நடவடிக்கையில் இராணுவத்திற்கு ஏற்பட்ட பாரிய உயிரிழப்பு விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவு சிறப்பான தொன்று என்பதை ஊர்ஜிதம் செய்வதாகவே அமைகின்றது. இவ்வாறு அண்மையில் யாழ்ப்பாணம் வந்து திரும்பிய 'சண்டே ஒப்சேவர்" செய்தியாளர் சுகீஸ்வர சேனாதீர தெரிவித்துள்ளார்.**

சண்டே ஒப்சேவர் பத்திரிகையில் இது குறித்து எழுதிய கட்டுரையில் மேலும் அவர் தெரிவிப்பதாவது:

ஒபரேஷன் யாழ்தேவி இராணுவ நடவடிக்கையில் அரச படைகளுக்கு ஏற்பட்ட பேரிழப்பானது வீடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவு மிகச் சிறப்பானதொன்று என்பதை ஊர்ஜிதம் செய்வதாக அமைகின்றது.

யாழ்தேவி இராணுவ நடவடிக்கையில் ஏற்பட்ட பெரும் இராணுவ உயிரிழப்புக்கு காரணம் இந்த தாக்குதல் ஆச்சரியம் தரும் வகையில் புலிகளுக்கு அமைந்திருக்கவில்லை என்பதேயாகும் என இராணுவ ஆய்வாளர்கள் குறிப்பிட்டதாகவும் சேனாதீர எழுதியுள்ளார்.

இராணுவ நடவடிக்கையை மிக இரகசியமாக வைத்திருப்பதான அதிகாரிகளின் முயற்சி தோல்வியடைந்து விட்டது. ஓகஸ்ட்மாத இறுதி வாரத்தில் யாழ்ப்பாணம் வர முன்னர் தாம் கொழும்பிலும், அநுராதபுரத்திலும் உள்ள சில படஉயரதிகாரிகளை சந்தித்ததாக கூறும் இக்கட்டுரையாளர் அவ்வேளை அவ்வதிகாரிகள் வடபகுதியில் எந்த நடவடிக்கையும் இப்போது இல்லை என்ற வகையிலேயே பேசினர் என்றும் குறிப்பிட்டுள்ளார். கிழக்கில்தான் முதலில் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என இராணுவ அதிகாரிகள் கூறினர். இதன் மூலம் கிழக்கில்தான் பெரும் நடவடிக்கைகள் நடைபெறும் என்ற தகவலை விடு

(4ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு



துணைப்படை வீரர்
2-ம் லெப். இ.சிவகுமார்

முல்லைத்தீவு மாவட்டம் மருதோடைக்கும் கற்குளத்திற்கும் இடையில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் துணைப் படை வீரர் ஒருவர் வீரச்சாவடைந்தார். இச் சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 1. 30 மணியளவில் இடம் பெற்றது.

வீரச்சாவடைந்த துணைப் படைவீரர் 2-ம் லெப்டினன்ட் இராசதுரை சிவகுமார் (பட்டிக்குடியிருப்பு நெடுங்கேணி)

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்

## ஹெலி தாக்குதல்

(தென்மராட்சி)

கிளாலிக் கடல் கரைகளில் சிறிலங்கா வீமானப்படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தி ஒன்று நேற்று இரவு 7 மணியில் இருந்து சிறிது நேரம் கலிபர் தாக்குதலை நடத்தியதாகவும் முகாம்களில் இருந்து ஷெல் தாக்குதல்கள் நடந்ததாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(86)

## நெருப்புக் காய்ச்சலால் மரணம்

(தென்மராட்சி)

தெருப்புக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு யாழ். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த எட்டு மாதக் குழந்

## சுதந்திரக் கட்சியிலிருந்து

இதற்கான அனுமதியை சிறிலங்கா பாதுகாப்பு நடவடிக்கைக்குழு வழங்கியுள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைச்சங்க வட்டாரங்கள் தெரி... பாதுகாப்புநடவடிக்கைக் குழு அனுமதி மறுத்ததைத் தொடர்ந்து வீடு திரும்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

[பா], [நி]

புள்ளிகளில் மோசடி செய்து நியமனம்பெற்ற

## 34 ஆங்கில ஆசிரியர்கள் தற்காலிக வேலை நீக்கம்

(கொழும்பு)

34 ஆங்கில ஆசிரியர்கள் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். 1992 ஆம் ஆண்டில் நடைபெற்ற பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்பட்ட 34 பயிலுனர் ஆசிரியர்களின் நியமனம் நிறுத்தப்பட்டுள்ளது. ஆசிரியர் பரீட்சைகளின்போது புள்ளிகளில் மோசடி செய்யப்பட்டதாக கூறப்படுவது பற்றி சி.ஐ.டியினர் நடாத்திய விசாரணையின் பின்பே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கூடுதலானபுள்ளிகளை இடுவதற்காக பரீட்சைத் திணைக்கள அதிகாரிகள் பரீட்சார்த்திகளிடமிருந்து 30,000 ரூபா முதல் 50,000 ரூபா வரை பணம் பெற்றுக்கொண்டதாகச்சொல்லப்படுகிறது.

இவ்வாறு மோசடி மூலம் மேலும் எவராவது ஆசிரியர் பதவி பெற்றுள்ளனராஎன்பது குறித்து விசாரணைகள் நடைபெற்றுவருவதாகச் சொல்லப்படுகிறது.

சேவையிலிருந்து பட்டம் பெறுவோர்

## ஒரு வருடத்தின் பின் பட்டதாரி நியமனம்

சேவையிலிருந்து பட்டம் பெறும் ஆசிரியர்களும், பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களும் தாம் பட்டம் பெற்ற தினத்திலிருந்து ஒரு வருட காலம் சேவையைப் பூர்த்தி செய்த பின்னர் எதிர்காலத்தில் நிரந்தரப் பட்டதாரி ஆசிரியர் ஆளணிக்குள் கொண்டு வரப்படுவர்.

இதற்கான சுற்றறிக்கையை கல்விச் சேவைச் சபைச் செயலாளர் சகல மாகாணக் கல்விச் செயலாளருக்கும் அனுப்பி வைத்துள்ளார்

இதேவேளை சேவையிலுள்ள போது பட்டம் பெற்ற ஆசிரியர்களையும் பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களையும் நிரந்தரப்பட்டதாரிபதவியணியில் சேர்க்கும் பொருட்டு கல்விச்சேவை ஆணைக்குழு சுற்றுநிருபம் ஒன்றை சகல பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

மேற்படி ஆசிரியர்களின் விபரத்தை எதிர்வரும் 16-ம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க ஏற்பாடுகள் செய்யுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

## வீதிகளில்குப்பைகூழங்களை போடுவோர்மீது நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நகர்ப்புறப் பகுதிகளிலுள்ளவர்களில் சிலர் தமது வீடு/வளவுகளிலுள்ள மரம் செடிகளை வெட்டி வீதிகளிலும், பொதுஇடங்களிலும் போடுவது அவதானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அசுத்தம் செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமென யாழ். மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரியின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது.

அச் செய்திக் குறிப்பின் விபரம் வருமாறு:

மாரிகாலம் ஆரம்பித்ததும் நகர்ப்புற மக்களில் சிலர் தமது வீடு/வளவில்உள்ள மரம் செடிகளை வெட்டி வீதிகளிலும், பொது இடங்களிலும் போடுவது அவதானிக்கப்பட்டுள்ளது. இதனால்வீதிப்பாவனை

(04ஆம் பக்கம் பார்க்க)

## வரவு செலவு திட்டத்தில் 6,318கோடி பற்றாக்குறை

(கொழும்பு)

சிறிலங்கா அரசு நவம்பர் மாதம் சமர்ப்பிக்கவுள்ள 1994 ஆம் நிதியாண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் ஏற்படும் பற்றாக்குறை ஆறாயிரத்து 318 கோடி 29 லட்சத்து 15 ஆயிரம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. 1994ஆம் ஆண்டிற்கான உத்தேச செலவினம் 13ஆயிரத்து 370கோடி நாலு லட்சத்து இருபதினாயிரம் ரூபா.

இதில் ஆறாயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்றுஎட்டுக் கோடி எழுபத்தைந்து லட்சத்து ஐயாயிரம் ரூபா (69, 987,50,5000) உள் நாட்டு கடன் மற்றும் வெளிநாட்டு கடன் மூலம் திரட்டப்படும். எனவே துண்டுவிழும் தொகையான 6318,29,15000 ரூபா (ஆறாயிரத்து முன்னூற்றுபதினெட்டுகோடி இருபத்தொன்பது லட்சத்து பதினைந்தாயிரம்) வரிகள் மற்றும் இதர வழிகள் மூலம் திரட்டப்படும்.

இவ் இராணுவ நடவடிக்கையில் இராணுவத்திற்கு ஏற்பட்ட பாரிய உயிரிழப்பு விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவு சிறப்பான தொன்று என்பதை ஊர்ஜிதம் செய்வதாகவே அமைகின்றது. இவ்வாறு அண்மையில் யாழ்ப்பாணம் வந்து திரும்பிய "சண்டே ஒப் சேவர்" செய்தியாளர் சுகீஸ்வர சேனாதிர தெரிவித்துள்ளார்.

சண்டே ஒப்சேவர் பத்திரிகையில் இது குறித்து எழுதிய கட்டுரையில் மேலும் அவர் தெரிவிப்பதாவது:

ஒபரேஷன் யாழ்தேவி இராணுவ நடவடிக்கையில் அரச படைகளுக்கு ஏற்பட்ட பேரிழப்பானது விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவு மிகச் சிறப்பானதொன்று என்பதை ஊர்ஜிதம் செய்வதாக அமைகின்றது.

யாழ்தேவி இராணுவ நடவடிக்கையில் ஏற்பட்ட பெரும் இராணுவ உயிரிழப்புக்கு காரணம் இந்த தாக்குதல் ஆச்சரியம் தரும் வகையில் புலிகளுக்கு அமைந்திருக்கவில்லை என்பதேயாகும் என இராணுவ ஆய்வாளர்கள் குறிப்பிட்டதாகவும் சேனாதீர எழுதியுள்ளார்.

இராணுவ நடவடிக்கையை மிக இரகசியமாக வைத்திருப்பதான அதிகாரிகளின் முயற்சி தோல்வியடைந்து விட்டது. ஒகஸ்ட்மாத இறுதி வாரத்தில் யாழ்ப்பாணம் வர முன்னர் தாம் கொழும்பிலும், அநுராதபுரத்திலும் உள்ள சில பட உயரதிகாரிகளை சந்தித்ததாக கூறும் இக்கட்டுரையாளர் அவ்வேளை அவ்வதிகாரிகள் வட பகுதியில் எந்த நடவடிக்கையும் இப்போது இல்லை என்ற வகையிலேயே பேசினர் என்றும் குறிப்பிட்டுள்ளார். கிழக்கில்தான் முதலில் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என இராணுவ அதிகாரிகள் கூறினர். இதன் மூலம் கிழக்கில்தான் பெரும் நடவடிக்கைகள் நடைபெறும் என்ற தகவலை விடு

(4ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரக் கட்சியிலிருந்து அநுரா ராஜினாமா

(கொழும்பு)

சிறிலங்கா பாராளுமன்ற உறுப்பினர் திரு. அனுரா பண்டாரநாயகா சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேறினார்.

அநுரா பண்டாரநாயகா சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் பதவியிலிருந்து நேற்று ராஜினாமாச் செய்தார். கட்சியின் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா செயலாளர் நாயகம் தர்மசிறி சேனநாயகா ஆகியோருக்கு இவர் தனது பதவி விலகல் குறித்து அறிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகரும், முன்னாள் பிரதம மந்திரியுமான எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா, திருமதி பண்டாரநாயகா ஆகியோருடைய மகனே அநுரா பண்டாரநாயகாவாவார்.

இவர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய வேட்பாளராக இருந்தார். அரசியலில் இவர் 25 வருடங்களாக இருந்துள்ளார்

இது தொடர்பாக இவர் விடுத்துள்ள அறிக்கையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனது முழுக்கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஒரு சிலரினால் திட்டமிட்டு மேற்கொள்ளும் செயலினாலேயே தான் இராஜினாமாச் செய்யும் நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டார்.

மிக நெருக்கடியான கால

(4ஆம் பக்கம் பார்க்க)

## தென்மாகாண முதல்வர் சத்தியப்பிரமாணம் தாமதம்

(கொழும்பு)

தென் மாகாண முதல்வராக சத்தியப் பிரமாணம் செய்ய நேற்று காலி சென்ற அமரசிறி தொடங்கொட சத்தியப் பிரமாணம் செய்யாமல் திரும்பியதுடன் இன்று சத்தியப்பிரமாணம்நடைபெறுமா? என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

தென் மாகாண ஆளுநர் பாக்கீர் மாக்கார் அமரசிறி தொடங்கொடவுக்கு ஒத்துழைப்பு நல்கும் 28 உறுப்பினர்களும் தனிப்பட்ட முறையில் தன்னை சந்திக்க வேண்டும் என்றும் அவ்வாறு சந்தித்தால் மட்டுமே சத்தியப் பிரமாணம் செய்ய தான் அனுமதிக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

## பிரிட்டிஷ் அன்பளிப்பின் ஒரு பகுதி தீவகத்திற்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனாவைத்தியசாலைக்கு பிரிட்டிஷ் அரசாங்கத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட மருத்துவ உபகரணங்களில் அம்புலன்ஸ் மற்றும் ஒரு தொகுதி மருத்துவ உபகரணங்கள் தீவுப்பகுதிகளிற்கு வழங்கப்படவுள்ளதாக யாழ் போதனாவைத்தியசாலைவட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கான முயற்சிகள் வைத்திய சாலைகளின் தலைமைப் பணிமனையினர் ஈடுபட்டு வருவதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. மேலும் மேற்படி அம்புலன்ஸ் மற்றும் ஒரு தொகுதி மருத்துவ உபகரணங்கள் என்பன தீவுப்பகுதிகளிற்கு அனுப்பப்பட்டதாக தகவல் கிடைக்கவில்லை.



துணைப்படை வீரர் 2-ம் லெப். இ.சிவகுமார்

முல்லைத்தீவு மாவட்டம் மருதோடைக்கும் கற்குளத்திற்கும் இடையில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் துணைப் படை வீரர் ஒருவர் வீரச்சாவடைந்தார். இச் சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 1. 30 மணியளவில் இடம் பெற்றது.

வீரச்சாவடைந்த துணைப் படைவீரர் 2-ம் லெப்டினன்ட் இராசதுரை சிவகுமார் (பட்டிக் குடியிருப்பு நெடுங்கேணி) என்பவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டிருக்கின்றனர்.

## ஹெலி தாக்குதல்

(தென்மராட்சி)

கிளாலிக் கடல் கரைகளில் சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தி ஒன்று நேற்று இரவு 7 மணியில் இருந்து சிறிது நேரம் கலிபர் தாக்குதலை நடத்தியதாகவும் முகாம்களில் இருந்து ஷெல் தாக்குதல்கள் நடந்ததாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (86)

நெருப்புக் காய்ச்சலால்

## மரணம்

(தென்மராட்சி)

நெருப்புக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு யாழ். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த எட்டு மாதக் குழந்தையொன்று கடந்த வெள்ளியன்று மரணமடைந்தது. கடந்த 2ஆம் திகதி யாழ். மருத்

(4ஆம் பக்கம் பார்க்க)

## கொத்துரொட்டி பீப்பாவுள் வெடிகுண்டு கண்டுபிடிப்பு

(தென்மராட்சி)

அல்லிப்பளை இறங்குதுறைப் பகுதியில் தேநீர்க்கடையொன்றில் இருந்த கொத்துரொட்டிப் பீப்பா ஒன்றினுள் குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதாக தெரியவருகின்றது.

கடை உரிமையாளர் நெருப்பு மூட்டுவதற்கு முன்னர் பீப்பாவை உருட்டியபோது இதனைக் கண்டுபிடித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (86)

## கிளாலி இறங்குதுறைப்பகுதி: விசேட வீதி விளக்குகள்

(நமது நிருபர்)

கிளாலி இறங்குதுறை பகுதிக்கு விசேடமாக தயாரிக்கப்பட்ட சுமார் ஆறு வீதி விளக்குகள் பூட்டப்படவுள்ளன.

இதன் பரீட்சார்த்த முயற்சியாக சில வீதி விளக்குகள் தயாரித்து முடிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

சுமார் ஆறு அடிக்கு மேற்பட்ட உயரத்தையுடைய கம்பமொன்றில் பொருத்தப்படவிருக்கும் இவ் விளக்குகள் ஒவ்வொன்றிற்குள்ளும் ஒவ்வொரு பெற்றோமாக்ஸ் வைக்கப்பட்டுள்ளன (பா)

## காவல்அரண்களில் ராணுவத்துடன் ஈ.பி.டி.பி

(கொழும்பு)

வவுனியாவில் இராணுவ காவல் அரண்களில் ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் பயன்படுத்தப்படுவதாக சிறிலங்கா படை வட்டாரங்கள் "லக்திவ" பத்திரிகைக்கு தெரிவித்துள்ளன.

இராணுவ உடையில் இவ் ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் காவல் அரண்களில் சிறிலங்கா இராணுவத்தினருடன் இணைந்து செயற்பட்டுவருவதாகவும் இராணுவத்தினருக்கு வழங்கப்படும் ஆயுதங்களை ஒத்த ஆயுதங்கள் இவர்களுக்கு வழங்கப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டி "லக்திவ" புகைப்படம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

## ராஜினாமா குறித்து அநுரா சிறிமாவுக்கு கடிதம்

(கொழும்பு)

அநுரா பண்டாரநாயக்கா தனது இராஜினாமாவைத் தொடர்ந்து தனது தாயாரும் கட்சியின் தலைவியுமான சிறிமாவோ பண்டாரநாயக்காவிற்கு ஒரு நீண்ட கடிதம் எழுதியுள்ளார் என அவரின் ஆதரவாளர் ஒருவர் தெரிவித்துள்ளார் கட்சியில் ஏற்பட்ட உட்பூசல் மற்றும் பதவிப்போட்டிகளில் ஏற்பட்ட மனத்தாங்கல்களினாலேயே தான் இராஜினாமா செய்து கொள்வதாகவும் அக்கடிதத்தில் தெரிவித்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தென்மராட்சி வாடிக்கையாளர்கட்கு

தென்மராட்சியில் நடந்த வன்செயல்கள் காரணமாக இடை நிறுத்தப்பட்ட எமது சேவை தொடர்ந்து மீண்டும் இயங்கிக் கொண்டு இருக்கின்றதுஎன்பதைவாடிக்கையாளர் கட்கு அறியத் தருகின்றோம். தங்கள் ஆதரவிற்கு நன்றி. டில்காவார் அன்ட் றேடியோ வேக்ஸ். கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-7569)

### இன்று வியாழ மாற்றம்

இன்று மாலை 5.40 மணிக்கு வியாழன் துலாராசிக்கு மாற்றமடைந்து. 11. 11. 94 வரை சஞ்சரிக்கும்.

எங்கும் விற்பனையாகின்றது. ரூ 10/- மக்மிலன், பூபாலசிங்கம் புத்தகசாலைகள், யாழ்ப்பாணம்.

(நூலாசிரியர் சத்யா) 6266

### மாணவர் உணவு முத்திரை

(கொழும்புத்துறை)

யாழ்.பிரதேச சபை செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு கடந்தமே / யூலை மாதங்களுக்குரிய மாணவர் மதிய உணவு முத்திரைகள் தற் பொழுது வழங்கப்பட்டுவருகின்றன.

(42)

### சதுரங்க சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு விழாப் போட்டிகளில் யாழ்ப்பாணக் கோட்ட மட்டத்திலான மாணவர்களுக்கான சதுரங்கச் சுற்றுப் போட்டிகள் இன்று காலை 8 30 மணியளவில் யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

### கருத்தரங்கு

[தொல்புரம்]

பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகள் எதிர்வரும் 20ஆம்திகதி புதன் கிழமை நடாத்தப்படவுள்ளன.

யாழ் மாவட்டத்திலுள்ள சிறுவர் பாடசாலைகளில் பாலர் கல்வியை போதித்து வரும் ஆசிரியர்களுக்கான மேற்படி கருத்தரங்கில் தற்கால சூழ்நிலைகளுக்கேற்ப நவீன முறைகளில் சிறுவர்களுக்கு கல்வியை கற்பிக்கும் முறைகள் பற்றி நெறிப்படுத்

## தோட்ட மேற்பார்வையாளர் ராணுவத்தால் கைது

அம்பாறை மாவட்டத்திலுள்ள திருக்கோவில் பிரிவிலுள்ள பேரைப்புதுத் தோட்ட மேற்பார்வையாளரான துரைராசா(வெளிக்கள உத்தியோகத்தர்) என்பவர் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப் பட்டு தற்போது கல்முனை படைமுகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

## நன்றி

### தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தமிழீழக் காவற்றுறைக் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கும்

29-7-93-ல் கிளாலியில் இருந்து யாழ்ப்பாணம் பிரயாணம் செய்யும்போது களவாடப்பட்ட (ஏறக் குறைய 85 000 ரூபா பெறுமதியான) எனது பிரயாணப் பையையும், அதனுள் இருந்த பொருள் களையும் மீட்டுத்தந்ததற்கு

எனது நன்றியை

தமிழீழ காவற்றுறைக் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கும்
தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும்
தெரிவித்துக் கொள்ளுகின்றேன்

க. கிருபாகரன்

42 செட்டித்தெரு,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(6262)

## 45-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு

29. 08. 1975

உதிர்வு

29. 08. 1993

செல்வன்

### உதயகுமார் உருத்திராபதி

(உதயன்)

## ஓராண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
12 — 04 — 1937



ஆண்டவன் அடியில்
23 — 09 — 1992

### திருமதி ஐயாத்துரை பூமலர்

திதி: 12-10 93

எங்கள் அன்புத் தெய்வமே - எமைப்
பிரிந்து ஓராண்டு ஆனாலும் - எம்
இதயம் உள்ளவரை உம் நினைவு
என்றென்றும் அகலாது - உங்கள்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
சகோதரர்கள்

கே. கே. எஸ். வீதி,
தாவடிச் சந்தி, தாவடி. (6264)

## கணக்காய்வாளர்கள் தேவை

(வன்னிப் பிராந்திய பொது நிர்வாக அலுவலகம்)

வன்னிப் பிராந்தியத்தில் கணக்காய்வு செய்யக் கணக் காய்வாளர்கள் தேவைப்படுகின்றனர்

கூட்டுறவுப் பயிற்சி பெற்றவர்களுக்கும், கூட்டுறவுத் துறையில் பணியாற்றிய அனுபவம் உடையவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

வயதெல்லை இல்லை. தங்குமிட வசதியும், போக்கு வரத்து வசதியும் அளிக்கப்படும்.

நேரில் பேசி, சம்பளம் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:-

**யாழ். வட்டச் செயலகம்**
(ராஜா டீசல் இஞ்ஜினியேர்ஸ்க்கு அருகாமையில்)
**பருத்தித்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி-7579)

## 7-ம் ஆண்டு நினைவஞ்சலி



## பொலிஸ் நிலையம் சென்றவர் பிணமாக மீட்கப்பட்டார்

பொலிசில் முறைப்பாடு செய்யப்போன பெண் பிணமாக மீட்கப்பட்டுள்ளார் இச் சம்பவம் மட்டக்களப்பு - பொலநறுவ மாவட்டங்களின் எல்லைக் கிராமமான வெலிகந்தையில் நடைபெற்றுள்ளது.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது, வெலிகந்த பகுதியிலுள்ள செவனப்பிட்டிய எனும் இடத்தைச் சேர்ந்த சுந்தரி என்னும் பெண்மணி கடந்த செவ்வாய்க் கிழமை கரப்பொல காவல்நிலையத்திற்கு முறைப்பாடு ஒன்றைச் செய்யச் சென்றிருந்தார் என்றும் மறுநாள் காலைவரை இவர் வீடு திரும்பாததால் இவரது மைத்துனரான ஆரோக்கியசாமி இவரைத் தேடி காவல்நிலையம் சென்றுள்ளார்.

அங்கு சுந்தரியைப் பற்றி விசாரித்தபோது அவரைப்பற்றித் தமக்கெதுவும் தெரியாது எனப் பொலிசார் பதிலளித்தனராம். ஆனால் சுந்தரி பொலிஸ் நிலையத்திற்கருகில் பின்னர் பிணமாகக் கிடக்கக் காணப்பட்டார்.

இது தொடர்பாகதற்போது நான்குபொலிசார் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப் பட்டுள்ளதாக தெரியவருகிறது.

## சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

### முக்கிய அறிவித்தல்

அன்புடையீர்!

ஒத்தி வைக்கப்பட்ட மஹாநவ சண்டிஹோமயாகம் எதிர்வரும் 25 10 93 திங்கள் முதல் 27-10 93 புதன் வரை வெகு சிறப்பாக நடைபெற அம்பாள் திருவருள் கூட்டி உள்ளாள். வியாழமாற்றத்தை முன்னிட்டு கீழ்வரும் ராசிக்காரரும், ஆயிரத்தெட்டுப் பாற்செம்பு எடுப்போரும், ஏனைய அம்பிகை அடியார்களும் அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாது முன்கூட்டியே தங்கள் பெயர், நட்சத்திரங்களைப் பதிவு செய்து பூஜையில் வைக்கப்படும் நூலும், கூடுதகடும் பெற்றுக் கொள்ளவும். நாட்டு மக்கள் நலம் பெற அனைவரும் பிரார்த்திக்கவும்.

தோஷமான ராசிகள்: இடபம், சிம்மம், துலாம், விருச்சிகம். மகரம், மீனம் கடகம் தவறாது பங்கு பற்றவும்.

குறிப்பு:- கேதாரகௌரிவிரதம் அநுட்டிப்பவரும் பெயர்களைப் பதிவு செய்து கௌரிவிரத புத்தகத்தையும் பெற்றுக்கொள்ளவும்.

அனைவரும் வருக அன்னை அருள் பெறுக
சுபம்

பிரம்மஸ்ரீ ப. மகாகணபதிசர்மா
(தர்மகர்த்தா)

(6265]

## நினைவு கூருகின்றோம்...

### 1993-10-12

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் மன்னார் உயிலங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய-

**பிறின்ஸ்லி** (பஸ்ரியன் குரூஸ் சகாயநாதன் - அரிப்புத் துறை முருங்கன் - மன்னார்)

**யேசுதாஸ்** (தங்கவேல் ராமன் - அரிப்புத்துறை, முருங்கன் மன்னார்)

1986ஆம் ஆண்டு மன்னார் - அடம்பன் பகுதியில் சிறிலங்காப்படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

மன்னார் மாவட்டத் தளபதி,

**லெப் கேணல் விக்ரர்** (மருசலின் பியூஸ்லஸ் பனங்கட்டிக் கொட்டு - மன்னார்)

யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு விழாப் போட்டிகளில் யாழ்ப்பாணக் கோட்ட மட்டத்திலான மாணவர்களுக்கான சதுரங்கச் சுற்றுப் போட்டிகள் இன்று காலை 8 30 மணியளவில் யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

### கருத்தரங்கு

[தொல்புரம்]

பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகள் எதிர்வரும் 20ஆம்திகதி புதன்கிழமை நடாத்தப்படவுள்ளன.

யாழ் மாவட்டத்திலுள்ள சிறுவர் பாடசாலைகளில் பாலர் கல்வியை போதித்து வரும் ஆசிரியர்களுக்கான மேற்படி கருத்தரங்கில் தற்கால சூழ்நிலைகளுக்கேற்ப நவீன முறைகளில் சிறுவர்களுக்கு கல்வியை கற்பிக்கும் முறைகள் பற்றி நெறிப்படுத்தப்படவுள்ளன.

இப் பயிற்சிநெறிக் கருத்தரங்கு யாழ் செயலக வீதியிலுள்ள றெட்பானா நிறுவனத்தின் பயிற்சிநிலையத்தில் நடைபெறவுள்ளதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [41]

### எறிகணை வீச்சு

(தொல்புரம்)

காரைநகர் ஊரிமுனங்குத்துறைப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா ஆயுதப்படையினர் தமது காவல் நிலைகளிருந்து பொன்னாலை தெற்கு பகுதிகளை நோக்கி நேற்றுக் (11.10 93) காலை 6.25 மணியளவில் எறிகணை வீச்சினை மேற்கொண்டனர் இவ் எறிகணைகள் அப்பகுதிகளிலுள்ள கரையோரங்களில் வீழ்ந்து வெடித்தன. இதனால் உயிர்ச்சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரியவருகிறது. [41]


வடமராட்சியில்

COLLEGE OF NEPTUNES

ஒவ்வொரு திங்கட்கிழமைகளிலும்

பொருளியல்

வரதராஜன்

10-1.30 — Day Class
2.30 4.30 — 94
4.30-6.30 — 95

**01.11 93**

**GAQ**

**வகுப்புகள்**

**ஆரம்பமாகின்றன.**

யாழ். பிரபல ஆசிரியர்களால்கற்பிக்கப்படும். பதிவுகள் ஏற்கப்படும்.

(சி 7582)


## 45-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு

24. 08. 1975

உதிர்வு

29. 08. 1993

செல்வன்

## உதயகுமார் உருத்திராபதி

(உதயன்)

நீ இன்றிய வாழ்வு எமக்குப்
பாலைவனம்
எம் விழிகளினை நீர் நிறைக்க
விரைந்து விட்டாய்.
எண்ணத்திலே எம்முடனே என்றும்
நிலைத்து நிற்பாய்.

இராஜ வீதி,
கோப்பாய்.

- குடும்பத்தினர்.


[6260]

## 1-ம் ஆண்டு நினைவலைகள்

மண்ணுலகில் நேசித்தவர்களே — என்னை
விண்ணுலகிலும் நேசியுங்கள்.

செல்வி

## சசிகலாராணி பெரியதம்பி



தாயின் மடியில்:
05 08-1972

இறைவனடியில்:
08 10 1992

திதி:
12 10-1993

எம்மையெல்லாம் மகிழவைக்கும்
கவிக்குயிலே சசியே
உன்னைப் பாட வேண்டாமென்று
சொன்னவர்கள் யார் குயிலே
உன்னோசை கேட்காது அன்பு பெற்றோர்
கலங்கி கண்ணீர் விட
பரிவு மிக்க அண்ணா அண்ணி பதறிட
பாசமுள்ள சகோதரிகள் பரிதவிக்க
சசியே நீ அஸ்தமித்த சூரியனாய்
பாதியிலே மறைந்தாயே யம்மா.

மு. கு. 12-10-1993 செவ்வாய்க்கிழமை இன்று எமது இல்லத்தில் நடைபெறும் நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

(6257)

—குடும்பத்தினர்

## யாழ். வட்டச் செயலகம்

(ராஜா டீசல் இஞ்ஜினியேர்ஸ்க்கு அருகாமையில்)

பருத்தித்துறை வீதி,

யாழ்ப்பாணம்.

(சி-7579)

## 7-ம் ஆண்டு நினைவஞ்சலி



முன்னாள் மன்னார் மாவட்டத்தளபதியும்
இயக்க மத்திய குழு உறுப்பினருமான

## லெப். கேணல் விக்டர் ஒஸ்கா

## (மருசலீன் பியூஸ்லஸ்)

பிறப்பு
24. 11. 1963

வீரச்சாவு
12. 10. 1986

புனல் முழங்கிடும் புவிமன் னாரினில்
புயல் பிறந்தது போல் பிறந்தவன்
அனல் புகுந்தது போல் எதிரியின்
அணி பொசுங்கிட பணி புரிந்தவன்
விதை விழுந்தது போல மண்ணிலே
விக்ரர் விழுந்துமா வீரனாகினான்
கதை முடிந்திடவில்லை இல்லையே
களம் முழுதும் அவன் கதை தொடருதே.

பனங்கட்டி கொட்டு.
மன்னார்.

— குடும்பத்தினர்.

[6252]

அன்னை விரும்பி வரு அன்னை அருள் பெறுக
சுபம்

பிரம்மஸ்ரீ ப. மகாகணபதிசர்மா
(தர்மகர்த்தா)

(6265]

## நினைவு கூருகின்றோம்...

## 1993-10-12

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் மன்னார் உயிலங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய-

**பிறின்ஸ்லி** (பஸ்ரியன் குரூஸ் சகாயநாதன் - அரிப்புத்துறை முருங்கன் - மன்னார்)

**யேசுதாஸ்** (தங்கவேல் ராமன் - அரிப்புத்துறை, முருங்கன் மன்னார்)

1986ஆம் ஆண்டு மன்னார் - அடம்பன் பகுதியில் சிறிலங்காப்படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

மன்னார் மாவட்டத் தளபதி,

**லெப் கேணல் விக்ரர்** (மருசலின் பியூஸ்லஸ் பனங்கட்டிக் கொட்டு - மன்னார்)

**2-ம் லெப் றோம்** (செல்வராசா செல்வநாதன் - தாமரைக்குளம், அடம்பன் மன்னார்)

மன்னாரில் - அடம்பனில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய-

❋ **சந்துரு** (கணபதிப்பிள்ளை சந்திரன்-எருக்கலம்பிட்டி மன்னார்)

மன்னார் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

❋ **இதயம் / றொனி** (இ. பெனடிக்ற் - காத்தான்குளம் மன்னார்)

❋ **சேகர்** ( — யோசப் - ஆலங்கேணி, மூதூர் திருமலை)

1987ஆம் ஆண்டு யாழ் - கோப்பாயில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**சால்ஸ்** (பூபாலசிங்கம் சந்திரகுமார் - மட்டுவில்தெற்கு, சாவகச்சேரி யாழ்)

யாழ் - பல்கலைக்கழக வளாகத்தில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய

**பீலிகஸ் / மெண்டிஸ்** (ஜீவரட்ணம் குருஸ்ரீபன் - காங்கேசன்துறைவீதி, பலாலி - யாழ்)

**ரஞ்சன் / வேப்பெண்ணை** (இராசரத்தினம் இராசசுவேந்திரன் - சந்தைஒழுங்கை, சுன்னாகம் - யாழ்)

யாழ் - கொக்குவில், பிரம்படியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**அகிலன்** (கணேசன் மகேந்திரன் - 15, அகிலன்வீதி அரியாலை - யாழ்ப்பாணம்)

மல்லாகம் - சுன்னாகம், கொல்லங்கலட்டி, பிரம்படிப்பகுதிகளில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட குழந்தை பெண், உட்பட 75 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு கட்டைபறிச்சானில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழிளைஞன்.

1989ஆம் ஆண்டு மட்டு - பழுகாமம் பகுதியில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட அதே இடத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன் .

1990ஆம் ஆண்டு அம்பாறை - கோமாரி இடம்பெயர்ந்தோர் முகாமில் படையினரால் கைதாகி காணாமல் போன பொத்துவில்-உல்லைப்பகுதிகளைச்சேர்ந்ததமிழ்ப் பொதுமகன்.

1991ஆம் ஆண்டு தமிழீழக்கடற்பரப்பில் (கிளாலி) தொழிலிலீடுபட்டுக்கொண்டிருந்த போது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட கடற்தொழிலாளர்களான 02தமிழிளைஞர்கள்

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

❋ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அத்துடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி-7581]

## சிந்தனைக்கு

'அரசியல்வாதி – ஆண்டவனையே தட்டிக் கழித்துவிட வல்லவன்.'

– வில்லியம் ஷேக்ஸ்பியர்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 12-10-1993

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023

த. பெ. எண் - 05


## குத்துக்கரணங்கள்

தமிழக நடிகர்களைப் பொறுத்து இவர் சிவாஜி கணேசனைப் பின்பற்றுகிறார். இவர் எம். ஜி. ராமச்சந்திரனைப் பின்பற்றுகிறார். இவர் ரஜனிகாந்தைப் பின்பற்றுகிறார் என்று கூறுவதுண்டு. அதற்கேற்ப சில நடிகர்கள் தமது நடை, உடை, பாவணைகளை மாற்றிக் கொள்வதுமுண்டு.

இதை ஒத்ததாகவே இன்று தமிழக அரசியலும் உள்ளது. அதிகாரத்தைக் கைப்பற்றவும், ஆட்சிபீடம் ஏறவும், அரசியல் தலைவர்கள் பிறரது வழிமுறைகளையும் பிறரது யுக்தியினையும் கையாளத் தொடங்கியுள்ளனர். இதில் வேடிக்கையென்னவென்றால், சாதாரண அரசியல்வாதிகள் மட்டுமல்ல, தமிழகத்தில் உயர் அரசியல் தலைவர்களே இவ்வழி முறையைக் கடைப்பிடிக்கத் தொடங்கியுள்ளமையாகும். இந்த வரிசையில், தமிழக முன்னாள்முதலமைச்சரும், தி. மு. க. தலைவருமான கருணாநிதியும் தற்பொழுது அடங்குகின்றார்.

தற்போதைய தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் அரசியல் அறிவிப்புக்கள் அவரை வெளியுலகத்திற்கு அறிமுகப்படுத்திய - சினிமாவில் வருவது போன்று - திடீர் திருப்பங்களும், ஸ்ரண்டுகளும் கொண்டவையே ஆகும். கட்சியில் இருந்து ஒதுங்குவதாகவும், முதலமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்வதாகவும் அடிக்கடி 'ஸ்ரண்ட்' விடும் செல்வி ஜெயலலிதா, தற்பொழுது தனது அரசியல் நிலையை விஸ்தீரணப் படுத்திக் கொண்டுள்ளார். கட்சி உறுப்பினர்களுக்கு அதிர்ச்சி ஊட்டி, ஓரம்கட்ட வேண்டியவர்களை ஓரம்கட்டவும், மக்களை ஏமாற்றவும் இவ் 'ஸ்ரண்டுகள்' அடிக்கடி இடம் பெறுவதுண்டு.

இந்த வழிமுறையிலேயே ஜெயலலிதா ஆட்சியைக்கைப் பற்றவும், அதிகாரத்தைப் பலப்படுத்தவும் முடிந்தது. இதனையே இன்று அவரது பரம வைரியான கருணாநிதியும் பின்பற்றத் தொடங்கியுள்ளார். இதன்வெளிப்பாடே அரசியலில் இருந்து ஓய்வுபெறப் போவதான அறிவிப்பும் தமிழீழக் கோரிக்கைக்கு ஆதரவில்லை என்ற கூற்றும் ஆகும்.

இதேவேளை, கருணாநிதி அரசியல் ஓய்வு பெறுவதற்கு உயர் ரத்த அழுத்தமே காரணமாகும் என தி. மு. க. பொதுச் செயலாளர் அன்பழகன் அறிவித்ததோடு, திரு. கருணாநிதி இனிமேல் அரசியலில் ஈடுபட

# "சோமாலியாவில் திடீர் திருப்பங்கள்"

இந்த மாத முற்பகுதியில் அமெரிக்கப் படைகளின் உலங்குவானூர்தியொன்று கிளர்ச்சியாளர்களால் சுட்டுவீழ்த்தப்பட்டதைத் தொடர்ந்து வாஷிங்டனில் சோமாலியா பற்றியும் ஜெனரல் அய்டீட் தலைமையிலான கிளர்ச்சிப் படைகள் பற்றியும் மீண்டும் மீண்டும் ஆலோசனைகள் நடத்தப்பட்டன. கடந்த நான்கு மாதங்களில் பாகிஸ்தான், இத்தாலி, நைஜீரியா. மற்றும் அமெரிக்கப் படையினரின் பலத்த உயிரிழப்புகள் ஏற்படுத்திய தாக்கத்தை விடவும் அதிகமாக இது உணரப்பட்டது. அமெரிக்கப் படையினரின் வான் நடமாட்டம் இதுவரை கட்டுப்படுத்தாமல் தான் இருந்தது. ஆனால், இச்சம்பவத்தின் பின்னர் அதுவும் கேள்விக்குரியதானதைத் தொடர்ந்து அமெரிக்கா எங்கும் பல கேள்விகள் பிறந்தன.

அமெரிக்கர்கள் சோமாலியாவில்ஏன் உயிர்துறக்கவேண்டும்? என்பது அவற்றில் முதன்மையானதாகும். அமெரிக்காவில் இருந்து மிகத் தொலைவில் இருக்கும் ஆபிரிக்க கண்டத்தின ஒரு மூலையிலுள்ள இந்த நாட்டில் அமெரிக்கர்களின் நலன் மிகவும் குறைவு என்றும் சுட்டிக் காட்டப்பட்டது. முன்னாள் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் தமது பதவிக் காலத்தின் இறுதியில் அமெரிக்கப் படையினரை சோமாலியத் தலைநகர் மொகாடிஸ்யூவிற்கு அனுப்பி வைத்திருந்தார். இப்போது இப்படையினர் மனிதாபிமானப் பணிகளே மேற்கொள்ளுவர் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நடவடிக்கைக்கு ஒப்பரேசன் ரெஸ்ரோர் கூக் என்றுபெயரிடப்பட்டிருந்தது. அமெரிக்கப் படையினர் இரண்டு மாதங்களில் நாடு திரும்ப முடியும் என்று கூடத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஒரு சில யதார்த்த வாதிகளைத் தவிர மற்றும் பலரும் சோமாலியாவில் அமெரிக்கப் படையினரின் பணிகள் சுலபமானதாகவே இருக்கும் என்று நம்பிக்கை தெரிவித்திருந்தனர். சோமாலியாவில் ஏற்பட்டிருந்த பெரும் பஞ்சமும் அதனைத் தொடர்ந்து அதிகரித்த பட்டினிச் சாவுகளும் அந்நாட்டு அரசைச் செயலிழக்கச் செய்திருந்தன என்பது தெரிந்ததே. இந்நிலையில் ...ப்பாக ஜெனரல் அலி மாதி முகம்மதுவும், ஜெனரல் முகம்மது பாரா அய்டீட்டும் எதியோப்பியாவில் கைகுலுக்கிக் கொள்ள வைக்கப்பட்டனர். ஆனாலும், சோமாலியாவிற்கான நிர்வாகம் மீள அமைக்கப்பட்டு விடவில்லை. யுத்தம் தொடர்ந்தது.

உலங்கு வானூர்தி சுட்டு வீழ்த்தப்பட்ட சம்பவத்தை தொடர்ந்து அதிபர் கிளின்டன் சில நெருக்கடிகளுக்கு உள்ளானார் இதனால் ஜெனரல் அய்டீட்டின் படைகளுடனான யுத்தத்தை நிறுத்துவது பற்றியும் அமெரிக்க நிர்வாகமும், அதிபர் கிளின்டனும் ஆலோசனை நடத்த வேண்டியேற்பட்டது. உத்தியோகப் பற்றற்ற முறையில் போர் நிறுத்தம் ஒன்றை அறிவித்து அமெரிக்கா உள்ளூர் நிர்வாகத்தில் ஜெனரல் அய்டீட்டைப் பங்கேற்கச் செய்யும் சூழலை உருவாக்க முயற்சிகள் தற்போது மேற்கொள்ளபடுகிறது. பதுங்கி இருந்து தாக்குவதாகவும், அமெரிக்க மற்றும் ஐ. நா. படையினரையும் கொல்வதாகவும் இதுகாலவரை சுமத்தப்பட்டுவந்த குற்றச்சாட்டுகள் கைவிடப்பட்டுள்ளன. இதனால்தான் சோமாலியாவில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக ஆபிரிக்க நாடொன்றின்விசாரணைக்கு ஜெனரல்அய்டீட்டின் சம்மதம் தெரிவித்துள்ளதுடன் அவர் போர் நிறுத்தத்திற்கும் பேச்சுவார்த்தைக்கும் இணக்கம் காட்டியுள்ளார். இதுதான் சோமாலியாவின் இன்றைய நிலையாக உள்ளது.

எனினும் சோமாலியாவில் டசினுக்கும் மேற்பட்ட அரசியல் குழுக்கள் ஆயுதபாணிகளாக இருப்பதும் இதனால் ஜெனரல் அய்டீட் மட்டும் நிர்வாகத்தில் பெரும்பான்மைப் பங்கு பெறுவதில் சிரமத்தை ஏற்படுத்தும் சோமாலியாவின் சிக்கல்களுக்கு அரசியல் தீர்வொன்று காணப்படாவிட்டால் அமெரிக்கா மற்றும் ஐ. நா. துருப்புக்கள் அங்கிருந்து விலகிச் செல்வது விரைவில் சாத்தியமாகப்போவதில்லை இதனால் அமெரிக்காவிற்கு மேலும் தர்மசங்கடமான நிலை தோன்றக்கூடும் அமெரிக்க அதிபர் பில் கிளின்டன் அமெரிக்கப் படையினரை மார்ச் மாதமளவில் தாயகத்திற்கு மீண்டும் அழைத்துக் கொள்ளலாம் எனக் கூறியிருக்கிறார். எனினும் மேலதிக துருப்பினரையும் கவசவாகனங்கள் மற்றும் டாங்கிகளையும். விமானந் தாங்கிகளையும் சோமாலியாவில் நடவடிக்கைகளுக்குகாக அனுப்பப்பட்டிருக்கின்றன. தேவைப்பட்டால் அவை நடவடிக்கையில் ஈடுபடலாம்என்றும்அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது.

### பூர்ணிமா பிரியதாஸ் குப்தா

# தப்பி ஓடிய 13 படையினர் பொலிசாரால் கைது

[கொழும்பு]

சிறிலங்காவின் பாதுகாப்பு படையிலிருந்து தப்பியோடிய 13 பேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் விடுதலைப்புலிகளுடன் போரிட தயங்கி தமது உயிர்களைப் பாதுகாத்துக் கொள்ளும் நோக்குடன் பல ஆயிரக்கணக்கான படையினர் தப்பியோடித் தலைமறைவாகத் திரிவது தெரிந்ததே.

இவ்வாறு தப்பியோடிய படையினரைக் கைது செய்வதற்காக தென் பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபரின் பணிப்பின் பேரில் தங்காலை ... தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி தேடுதல் நடவடிக்கையில் 52 பொலிசார் ஈடுபட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## விளையாட்டுப் போட்டி

(கொழும்புத்துறை)

கட்டைப்பிராய் சரஸ்வதி சனசமூகநிலையத்தின் பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டிகள் இன்று செவ்வாய்க்கிழமை பி. ப. 1.00 மணிக்கு பாலர்பாடசாலை விளையாட்டுமைதானத்தில் நடைபெறும்

# தமிழில் நிரப்பிய படிவத்தை கிழித்தெறிந்த சிங்கள அதிகாரி

[வவுனியா]

பிறப்புச் சான்றிதழ் பெறுவதற்காக விண்ணப்பப் படிவத்தை தமிழில் பூர்த்தி செய்து பதிவாளரிடம் கையளித்த போது அப்படிவம் கிழித்து வீசப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

படிவம் தமிழில் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதைக் கண்டே பதிவாளர் அதனைக் கிழித்தெறிந்ததாகக் கூறப்படுகிறது

உடப்பு ஆண்டிமுனையைச் சேர்ந்த புண்ணியசீலன் என்ற குடும்பஸ்தருக்கே இந்த அனுபவம் ஏற்பட்டது.

விண்ணப்பப் படிவத்தை கிழித்தெறிந்த பதிவாளர் சிங்களத்தில் படிவத்தை பூர்த்தி செய்யுமாறு கூறி வேறொரு படிவத்தையும் கொடுத்துள்ளார்.

இக்குடும்பஸ்தருக்கு தமிழைத்தவிர வேறு எந்தமொழியும் எழுதத் தெரியாது. ஆனாலும் தனது குழந்தையின் பெயரை சிங்கள மொழியிலேயே பதிய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதால் பல கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளார். தமிழ் மொழியை அரச கரும மொழியாக்கியுள்ளதாகக் கூறி பல வருடங்களாகியும் தமிழ் மொழியில் பெயரை எழுதும் அடிப்படை உரிமை கூட மறுக்கப்பட்டுள்ளது என விண்ணப்பத்தைத் தமிழில் கையளித்த திரு. புண்ணியசீலன் கவலை தெரிவித்தார்.

புலிகளிடமிருந்து தம்மைபாதுகாக்க

# தமது முகாமில் தங்குமாறு மக்களுக்கு படையினர் உத்தரவு

அம்பாறை மாவட்ட அக்கரைப்பற்று தொகுதியில் உள்ள தமிழ் மக்களை இரவு வேளை முகாமுக்கு வந்து தங்கியிருக்கும்படி பணித்துள்ளனர்.

ஏற்கனவே அங்கு இப்பகுதி மக்கள் முகாமில் முடங்கிக் கிடக்கின்றனர். இம்முகாம் விடுதலை புலிகளால் தாக்கப்படலாம் என்ற அச்சம் காரணமாகவே படையினர் இவ்வாறு பணித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# அடகு நகைகளை வவுனியாவில் மீளளிக்க கோரிக்கை

[முல்லைத்தீவு]

கடந்த 1990ஆம் ஆண்டுகளுக்கு முதல் தாங்கள் முல்லைத்தீவு மக்கள் வங்கியில் அடகுவைத்த நகைகளை வவுனியாவில் வைத்து மீளளிக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட மக்கள் அரசாங்க அதிபர் ஊடாக மக்கள் வங்கியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அடகு வைக்கப்பட்ட நகைகளுக்கு உரிய தொகையையும், வட்டியையும் செலுத்தி முடித்துள்ள முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்குத்தற்போது கொழும்பில் வைத்தே நகைகள் மீளளிக்கப்படுகின்றன, பலவித பிரயாண கஷ்டங்களுக்கு மத்தியில் கொழும்பு சென்று நகைகளை மீளப் பெறுவதில் சொல்லொணாத கஷ்டங்கள் மட்டுமன்றி முடிச்சு மாறிகள் வழிப்பறி கொள்ளையர்கள் போன்றோரிடம் சிக்கி ஆபத்துக்குள்ளாக நேரிடுவதாகவும் இவற்றைத்தவிர்த்து உதவும் வகையில் வவுனியாவில் வைத்து அடகு நகைகளை மீளளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் எனவும் அவர்கள் முல்லைத்தீவு அரசாங்க அதிபரிடம் கோரியுள்ளனர்.

கோரிக்கையை ஏற்றுக் கொண்ட முல்லைத்தீவு அரசாங்க அதிபர் எஸ் தர்மகுலசிங்கம் உரிய நடவடிக்கைகளுக்காக மக்கள் வங்கியின் தலைமைப்பீடத்துடன் தொடர்பு கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# தமிழக மீனவர் கொலை ஜெயலலிதா கவலை

(சென்னை)

... பவங்கள் குறித்துப் புகார் செய்திருக்கும் இந்திய மீனவர்

லலிதாவின் அரசியல் அறிவிப்புகள் அவரை ...
யுலகத்திற்கு அறிமுகப்படுத்திய சினிமாவில் வருவது போன்று - திடீர் திருப்பங்களும், ஸ்ரண்டுகளும் கொண்டவையே ஆகும். கட்சியில் இருந்து ஒதுங்குவதாகவும், முதலமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்வதாகவும் அடிக்கடி 'ஸ்ரண்ட்' விடும் செல்வி ஜெயலலிதா, தற்பொழுது தனது அரசியல் நிலையை விஸ்தீரணப் படுத்திக் கொண்டுள்ளார். கட்சி உறுப்பினர்களுக்கு அதிர்ச்சி ஊட்டி, ஓரம்கட்ட வேண்டியவர்களை ஓரம்கட்டவும், மக்களை ஏமாற்றவும் இவ் 'ஸ்ரண்டுகள்' அடிக்கடி இடம் பெறுவதுண்டு.

இந்த வழிமுறையிலேயே ஜெயலலிதா ஆட்சியைக்கைப் பற்றவும், அதிகாரத்தைப் பலப்படுத்தவும் முடிந்தது. இதனையே இன்று அவரது பரம வைரியான கருணாநிதியும் பின்பற்றத் தொடங்கியுள்ளார். இதன்வெளிப்பாடே அரசியலில் இருந்து ஓய்வுபெறப் போவதான அறிவிப்பும் தமிழீழக் கோரிக்கைக்கு ஆதரவில்லை என்ற கூற்றும் ஆகும்.

இதேவேளை, கருணாநிதி அரசியல் ஓய்வு பெறுவதற்கு உயர் ரத்த அழுத்தமே காரணமாகும் என தி. மு. க. பொதுச் செயலாளர் அன்பழகன் அறிவித்ததோடு, திரு. கருணாநிதி இனிமேல் அரசியலில் ஈடுபட மாட்டார் எனவும் அடித்துக் கூறினார். இருப்பினும், திரு. அன்பழகன் கூறி இருபத்திநான்கு மணி நேரத்திற்குள் திரு. கருணாநிதி தனது அறிவிப்பை வாபஸ் பெற்றுக் கொண்டார். இரத்த உயர் அழுத்தத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்த கருணாநிதியால் எவ்வாறு 24 மணி நேரத்திற்குள் தனது உடல் நிலையை சீராக்கமுடிந்தது? தனது அறிவிப்பை மீளப்பெற எண்ணம் எழுந்தது என்பது கேள்வியே ஆகும்.

தமிழக அரசியல்வாதிகள் எப்பொழுதும், எவருமே தமிழக மக்களின் உணர்வுகளையோ அன்றி, அவர்களின் அபிலாசைகளையோ கருத்திற் கொள்ளவில்லை. மக்களை தமது அரசியல் லாபத்திற்காக பகடைக்காய்களாகவே மாற்றி வந்துள்ளனர். இதற்காக அவர்கள் எப்பொழுதும் தமிழ் மக்களைக் காட்டிக் கொடுத்துமே வந்துள்ளார்கள். அவர்களின் குறிக்கோள்கள் எப்பொழுதும் மத்திய அரசிடம் சமரசம் செய்துகொள்வதும், ஆட்சி அதிகாரத்தைப் பாதுகாத்துக் கொள்வதுமே ஆகும். இதற்காக ஆட்சியில் இருந்த திராவிடக் கட்சிகளும், எதிர்க்கட்சிகளாக இருந்த திராவிடக் கட்சிகளும் மத்திய அரசுகளுடன் மாறிமாறிக் குலாவின.

இந்த வகையிலேயே திராவிட நாட்டுக் கோரிக்கை கைவிடப்பட்டது தொடக்கம் சகலதும் அடங்குகின்றது. இதன் ஒரு தொடர்ச்சியாகவே இன்று இலங்கைத் தமிழரின் தேசிய இன விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான கருணாநிதியின் முடிவும் காட்டிக் கொடுப்பும் ஆகும்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் இவ்வாறான அரசியல்வாதிகளின் ஆதரவை நம்பி ஆரம்பிக்கப்பட்ட தொன்றல்ல. தமிழீழ மக்கள் தங்களை நம்பியே ஆரம்பித்த போராட்டமாகும். ஆனால், தமது இனம் அண்டை நாடொன்றில் உள்ளது. அவர்கள் தமது சகோதரர்களுக்கு உதவுவார்கள்என எதிர்பார்த்தது உண்மைதான் அவர்களும் உதவி செய்யத் தவறவில்லை. ஆனால், தமிழக அரசியல்வாதிகள் தமது அதிகார வெறியினால், தமிழக மக்களின் நலனையும், தமிழீழ மக்களின் நலனையும் பலியிடத் தயாராக இருந்தனர். இது ஒரு அப்பட்டமான காட்டிக் கொடுப்பாகும். ஆனால் தமிழீழ மக்களுக்கு இதனால் இடைக்காலத்தில் பாதிப்புக்கள் ஏற்படக்கூடுமோயினும், தமிழக மக்களுக்கே பெரும் கேடுவிளைவிக்கக் கூடியதாகும். ஆகையினால், தமிழக மக்கள், முதலில் இது குறித்து விழிப்புப் பெற வேண்டும். அப்பொழுதே அவர்கள் இவ் அரசியல்வாதிகளிடம் இருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ளமுடியும். தமது எதிர்காலத்தைச் சீராக்கமுடியும்.

---

அமெரிக்கப் படையினரை சோமாலியத் தலைநகர் மொகாடிஸ்யூவிற்கு அனுப்பி வைத்திருந்தார். இப்போது இப்படையினர் மனிதாபிமானப் பணிகளே மேற்கொள்ளுவர் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நடவடிக்கைக்கு ஓப்பரேசன் ரெஸ்ரோர் கூக் என்றுபெயரிடப்பட்டிருந்தது. அமெரிக்கப் படையினர் இரண்டு மாதங்களில் நாடு திரும்ப முடியும் என்று கூடத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஒரு சில யதார்த்த வாதிகளைத் தவிர மற்றும் பலரும் சோமாலியாவில் அமெரிக்கப் படையினரின் பணிகள் சுலபமானதாகவே இருக்கும் என்று நம்பிக்கை தெரிவித்திருந்தனர். சோமாலியாவில் ஏற்பட்டிருந்த பெரும் பஞ்சமும் அதனைத் தோடர்ந்து அதிகரித்த பட்டினிச் சாவுகளும் அந்நாட்டு அரசைச் செயலிழக்கச் செய்திருந்தன என்பது தெரிந்ததே. இந் நிலையில் அங்கு யுத்தத்தில் ஈடுபட்டிருந்த பல்வேறு குழுக்களையும் ஒருங்கிணைக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. குறி...

...சம்மதம் தெரிவித்துள்ளதுடன் அவர் போர் நிறுத்தத்திற்கும் பேச்சுவார்த்தைக்கும் இணக்கம் காட்டியுள்ளார். இதுதான் ...

## பூர்ணிமா பிரியதாஸ் குப்தா

## தப்பி ஓடிய 13 படையினர் பொலிசாரால் கைது

[கொழும்பு]

சிறிலங்காவின் பாதுகாப்பு படையிலிருந்து தப்பியோடிய 13 பேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் விடுதலைப்புலிகளுடன் போரிட தயங்கி தமது உயிர்களைப் பாதுகாத்துக் கொள்ளும் நோக்குடன் பல ஆயிரக்கணக்கான படையினர் தப்பியோடித் தலைமறைவாகத் திரிவது தெரிந்ததே.

இவ்வாறு தப்பியோடிய படையினரைக் கைது செய்வதற்காக தென் ராந்திய பிரதி பொலிஸ்மா அதிபரின் பணிப்பின் பேரில் தங்காலை பொலிசார் நடத்திய திடீர் சுற்றிவளைப்பின் போதே இப்பதின்மூன்று படையினரும் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி தேடுதல் நடவடிக்கையில் 52 பொலிசார் ஈடுபட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## தாயகம் திரும்பியோரால் கொலரா பரவவில்லை

### வடக்கு - கிழக்கு வைத்திய வட்டாரம் தகவல்

(கொழும்பு)

தமிழ் நாட்டிலிருந்து தாயகம் திரும்பிய அகதிகள் மூலமாகவே யாழ்ப்பாண குடாநாட்டில் கொலரா நோய் பரவி இருக்கிறது எனக் கூறப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று வடக்கு கிழக்கு மாகாண வைத்திய வட்டாரங்கள் கூறியுள்ளன

தென்னிந்தியாவிலிருந்து நாடு திரும்பிய அகதிகள் மூலமாகவே யாழ். குடாநாட்டில் கொலரா பரவியிருக்கலாம் என்று சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கைக்கு பதிலளிக்கும் வகையில்வடக்கு கிழக்கு வைத்திய வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன.

அத்துடன் தாயகம் திரும்பும் அனைவருக்கும் துறைமுக இறங்குதுறையில் வைத்து தடுப்பூசி ஏற்றப்படுவதாகவும் யாழ். குடாநாட்டுக்குள் உத்தியோகபூர்வமாக தாயகம் திரும்பிய எவரும் அனுப்பப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விளையாட்டுப் போட்டி

(கொழும்புத்துறை)

கட்டைப்பிராய் சரஸ்வதி சனசமூகநிலையத்தின் பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டிசன் இன்று செவ்வாய்க்கிழமை பி. ப. 1.00 மணிக்கு பாலர்பாடசாலை விளையாட்டுமைதானத்தில் நடைபெறும்

மாலை 7 00மணிக்கு நிலையக் கலாசாரக்குழுத்தலைவர் திரு. த. சந்திரராசா தலைமையில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும் என நிலையச் செயலாளர் திரு செ. நாகரத்தினம் தெரிவித்துள்ளார்.

## கல்விக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் மகாவித்தியாலயத்தில் ''கல்விக்கண்காட்சி'' ஒன்று நாளை காலை 8 . 30 மணிதொடக்கம் மாலை 4.30 மணிவரைநடைபெறவுள்ளது.

மேற்படி பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு பிரதிக்கல்விப் பணிப்பாளர் இ. சிவானந்தன் பிரதமவிருந்தினராகவும் எஸ். சுப்பிரமணியம், த. முத்துக்குமாரசுவாமி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்கின்றனர்.

# பாதுகாப்பை உறுதிப்படுத்த பங்களிப்புச்செய்ய வேண்டும்

## - இளம்பரிதி

(தொல்புரம்)

எமது லட்சியப் போராட்டமானது உங்களுக்கானதே, எமது போராட்டமானது வாழ்வில் மாற்றம், அறிவின் உயர்வு என்பதனைக் கருத்திட்டமாகக் கொண்டு மாணவர்களாகிய நீங்கள் கல்வியோடு, நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் உங்கள் மேலான பங்களிப்பினை நல்க விரைவில் முன்வரவேண்டும் என சுழிபுரம் றெமிங்டன் கல்வி நிலைய மாணவர்கள் மத்தியில் கலந்துரையாடிய யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி தெரிவித்தார்.

நாட்டில் தற்போதுள்ள போர்க்காலச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு மக்கள் மத்தியில் போர்க்காலக் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டு வரும் இவ்வேளையில் மாணவர்களின் பங்களிப்பின் அவசியத்தைஉணர்த்துமுகமாக ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கில் தொடர்ந்து அவர் உரையாற்றுகையில், நாம் எமது உரிமையை வென்றெடுக்கும் நோக்கோடு போராடி வருகிறோம். எம்மிடம் உறுதிமிக்க மனோபலம் உண்டு. இதை அனைவரும் உணர்ந்து தம்மாலான சகல பங்களிப்பினையும் நல்க முன்வர வேண்டும். ஊரே புலியானால் நாடே களமாகும். அப்போது தான் எமது இலட்சியப் பாதையை, முன்னெடுத்துச் சென்று சுதந்திர தமிழீழத்தை பெறலாம் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது கல்வி நிலைய ஆசிரியர்களும், சங்கானை வட்ட அரசியல்துறை பொறுப்பாளர் திரு. ந. மதி அவர்களும், நீதிநிர்வாகத் துறையைச் சேர்ந்த செல்வி விதுபாலா அவர்களும் சமுகமளித்திருந்தனர். [41]

---

...லைத்தீவு மக்கள் வங்கியில் அடகுவைத்த நகைகளை வவுனியாவில் வைத்து மீளளிக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட மக்கள் அரசாங்க அதிபர் ஊடாக மக்கள் வங்கியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அடகு வைக்கப்பட்ட நகைகளுக்கு உரிய தொகையையும், வட்டியையும் செலுத்தி முடித்துள்ள முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்குத்தற்போது கொழும்பில் வைத்தே நகைகள் மீளளிக்கப்படுகின்றன, பலவித பிரயாண கஷ்டங்களுக்கு மத்தியில் கொழும்பு சென்று நகைகளை மீளப் ...

...சிக்கி ஆபத்துக்குள்ளாக நேரிடுவதாகவும் இவற்றைத்தவிர்த்து உதவும் வகையில் வவுனியாவில் வைத்து அடகு நகைகளை மீளளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் எனவும் அவர்கள் முல்லைத்தீவு அரசாங்க அதிபரிடம் கோரியுள்ளனர்.

கோரிக்கையை ஏற்றுக் கொண்ட முல்லைத்தீவு அரசாங்க அதிபர் எஸ் தர்மகுலசிங்கம் உரிய நடவடிக்கைகளுக்காக மக்கள் வங்கியின் தலைமைப்பீடத்துடன் தொடர்பு கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## தமிழக மீனவர் கொலை ஜெயலலிதா கவலை

(சென்னை)

சிறிலங்கா கடற்படையினரால் தமிழக மீனவர்கள் சுட்டுக் கொல்லப்படுவது குறித்து மத்திய அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தமிழக முதல்வர் கேட்டுள்ளார்.

தமிழ் நாட்டைச் சேர்ந்த நான்கு மீனவர்கள் சென்ற வெள்ளிக்கிழமையன்று சிறிலங்கா கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டது குறித்து முதல்வர் செல்வி ஜெயலலிதா கவலை தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரசிம்மராவுக்கு அவர்அனுப்பியுள்ள கடிதமொன்றில் இலங்கைஅரசிடம் இதுபற்றி எடுத்துக்கூறி இத்தகைய மனிதத்தன்மை அற்ற செயல்கள் மீண்டும் நடைபெறாதிருக்க தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்த வேண்டும் எனக் கேட்டுள்ளார்.

கடந்த செப்ரெம்பர் மாதம் இந்திய அரசு இத்தகைய சம்பவங்கள் குறித்துப் புகார் செய்திருந்தும் இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தொடர்ந்து தாக்குவது மிகவும் வேதனை அளிப்பதாகவும் இரு நாடுகளுக்குமிடையிலான நல்லுறவுகளுக்கு இத்தகைய செயல்கள் பெரிதும் குந்தகம் விளைவிக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

## பி. எல். ஒவிற்கு புதியதலைவர்?

(டமாஸ்கஸ்)

பாலத்தீன விடுதலை இயக்கத்திற்கு புதிய தலைவர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கான பேச்சுவார்த்தைகளை பத்து பாலத்தீனிய இயக்கங்கள் சிரியத் தலைநகர் டமாஸ்கஸ்சில் மேற்கொண்டுள்ளன. பல்வேறு பாலத்தீனிய இயக்கத் தலைவர்களையும் கொண்ட மாநாடு ஒன்றைக் கூட்டுவதற்கும் இங்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## சோமாலிய கிளர்ச்சிக்குழு யுத்தநிறுத்த அறிவிப்பு

சோமாலியாவில் கிளர்ச்சிக் குழுத் தலைவர் முகமட் ஐடீட் போர் நிறுத்த அறிவிப்பு செய்ததை அடுத்து நேற்று மொகடிசியூவில் அமைதி நிலவியது. ஜெனரல் ஐடீட்டின் முடிவை சோமாலியாவுக்கு மேலும் 53,000 அமெரிக்க படைகளைஅனுப்பியுள்ள ஜனாதிபதி பில் கிளிண்டன் வரவேற்றுள்ளார்.

ஐடீட் மீண்டும் அரசியலினுள் நுழையும் வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளதை ஏனைய சோமாலிய கிளர்ச்சிக்குழுக்கள் கண்டித்துள்ளன.

## பொதுநல சுதந்திர குடியரசில் ஜோர்ஜியாவும் இணையும்

(ரிப்சிலி)

சுதந்திர குடியரசு நாடுகள் அமைப்பில் ஜோர்ஜியாக் குடியரசு விரைவில் இணைந்துவிடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ரஷ்யா, ஆர்மீனியா, அசர்பைஜான் ஆகிய நாடுகளின் தலைவர்களுடன் ஆலோசனை நடத்திய பின்னர் ஜோர்ஜியா அதிபர் எட்வார்ட் எஷவர்நாட்சே இதனை அறிவித்தார்.

ஆர்மீனியாவுக்கும் அசர்பைஜானுக்கும் இடையிலான போர் மற்றும் ஜோர்ஜியாவில் ஆப்காசிய கிளர்ச்சியாளர்களின் சண்டைகள்என்பவற்றிற்குப் பின்னான நிலைமைகள் பற்றி ஆராய்வதற்காக தலைவர்களின் இந்த மாநாடு நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

ஈழநாதம்

# மாவீரரான முதற் பெண்போராளிக்கு மன்னாரில் நினைவு அஞ்சலி

மன்னார் பெரியபண்டிவிரிச்சானில் 2ஆம் லெப். மாலதி அவர்களின் நினைவு நாளையொட்டி உருவப்படத்திறப்பு விழாவும், விளையாட்டுப் போட்டிகளும், வீரவணக்கக் கூட்டமும் கொண்டாடப்பட்டன. இந்நிகழ்வானது மன்னார் மாவட்ட விடுதலைப் புலிகளின் மகளிர் அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்டது. இதில் உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம் போன்ற போட்டிகளும் இடம் பெற்றன.

இந் நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியை மாவட்ட சிறப்புத் தளபதி திரு. ஜான் அவர்கள் ஏற்றி வைத்தார். உருவப்படத்தினை 2ஆம் லெப். மாலதியின் தந்தை பேதுறு அவர்கள் திறந்து வைத்தார். தொடர்ந்து ஈகைச்சுடரினை மாவட்ட அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் திரு. நந்தகுமார், மாவட்ட மகளிர் அமைப்பு அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் செல்வி இளவரசி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

இரவு 7. 30 மணியளவில் மகளிர் அமைப்பைச் சேர்ந்த செல்வி மாதிரி அவர்களின் தலைமையில் வீரவணக்கக் கூட்டம் இடம் பெற்றது. இதில் மங்கள விளக்கை மாவட்டத் தளபதி திரு. கதிர் அவர்கள் ஏற்றிவைத்தார். தொடர்ந்து பெரியபண்டி விரிச்சான் பாடசாலை அதிபர், மகளிர் அமைப்பு அரசியல்துறையை சேர்ந்த செல்வி இளவேஜினி, மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு. நந்தகுமார், மாவட்ட மகளிர் அமைப்பின் அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வி வளமதி ஆகியோர் உரை நிகழ்த்தினர். தொடர்ந்து இரவு கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன

## அரைகுறையாக எரிந்த பெண்ணின் சடலம் மீட்பு

உடல் எரிந்த நிலையில் ஒரு வயோதிப மாதுவின் சடலம் ஒன்று பருத்தித்துறை ஆனைவிழுந்தான் என்ற இடத்திலிருந்து நேற்றுக் காலை மீட்கப்பட்டது.

புலோலிகிழக்கு பன்னையம் பதியைச் சேர்ந்த நடராசா நாகரத்தினம் (வயது60) என்பவரது சடலமே இவ்வாறு பற்றைமறைவிலிருந்து மீட்கப் பட்டதாகும்.

பருத்தித்துறை மாவட்ட அதிகாரியும் மரணவிசாரணை அதிகாரியும் ஸ்தலத்திற்குச் சென்று பிரேத பரிசோதனையை மேற்கொண்டனர். [யோ]

## தென்னை மரத்திலிருந்து தவறிவீழ்ந்து மரணம்

(வடமராட்சி கிழக்கு)

தென்னை மரத்திலிருந்து வீழ்ந்து இளைஞர் ஒருவர் மரணமானார்.

இச்சம்பவம் அம்பன் என்னுமிடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அம்பனைச் சேர்ந்த குணரட்ணசிங்கம் சுதர்சன் (வயது 17) என்ற இளைஞரே தென்னை மரத்தில் ஏறிக் கொண்டிருந்தபோது, தவறிவீழ்ந்து மரணமானவராவார். (36), (யோ


## தன்னியக்க சிலிண்டர் இயந்திர இயக்குநர் தேவை

தன்னியக்க சிலிண்டர் இயந்திர (ORIGINAL HEIDELBERG CYLINDER) இயக்குநர் தேவை. முன் அனுபவச் சான்றிதழ்களுடன் 15-10-93 காலை 10-00 மணிக்கு நேரில் வரவும்.

ஈழநாதம்
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(இ)


## அநாதரவாக கிடந்த நெஸ்பிறே ரின்கள்

[தென்மராட்சி]

அல்லிப்பளைப் பகுதியில் அநாதரவாக கிடந்த பால்மா ரின்களைகண்ட பொதுமக்கள் பீதியடைந்து அங்கிருந்து விலகிய சம்பவம்ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இறங்குதுறையை அண்டிய பகுதியில் காணப்பட்ட இப் பால்மா ரின்கள் குறித்து சந்தேகம் கொண்டு அதனைப் பரீட்சித்தபோது அவற்றினுள் நெஸ்பிறேபால்மா இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. 'யாழ் தேவி' படையினரே இவற்றை கைவிட்டுச் சென்றிருக்க வேண்டும் என நம்பப்படுகிறது. [86]

### வீதிகளில்

யாளருக்கு சிரமத்தையும், தேவையற்ற விபத்துக்களையும் ஏற்படுத்துகின்றன. நகரத்தில் எமதுசுத்திகரிப்பு பணிகளும் பாதிக்கபபடுகின்றன. எரிபொருள் பற்றாக்குறை, வாகன பற்றாக்குறை இருந்தும் மாநகரசபை நகர்ப்புற சுத்திகரிப்புச் சேவையை இயன்றளவு செய்து வருகின்றது. கொலரா பரவும் காலத்தில், நீர் விநியோகம், அத்தியா

### நெருப்புக்

துவமனையில் நெருப்புக் காய்ச்சலினால் மரணமடைந்த மிருசுவிலைச் சேர்ந்த நடராசா சிவலோகராசா (வயது 20) என்பவரின் சகோதரனே இக் குழந்தை ஆகும். அக் குடும்பத்தைச் சேர்ந்த ஏனையோரும் நெருப்புக் காய்ச்சலினால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

### போலி

ஆவணங்களுடன் பிடிபட்டவர்களில் 39 சத வீதமானவர்கள் இலங்கையிலிருந்து அகதி அந்தஸ்துத் தேடி வேறு நாடுகளுக்குச் செல்பவர்களாவர். அமெரிக்கா, கனடா, பிரிட்டன், ஜெர்மனி ஆகிய நாடுகளுக்குச் செல்ல உண்மையான சிங்கப்பூர் பாஸ்போட்டுக்களும் பயண ஆவணங்களும் வழங்குவதாக அகதி அந்தஸ்து தேடிச் செல்வோரிடம் தரகர்கள் கூறுகின்றார்கள். இலங்கையில் அங்குள்ள கொந்தளிப்புக் காரணமாக இந்த அகதிகள் தமது பயணத்துக்காகப் பெரும் தொகைப் பணத்தை வழங்குகின்றார்கள்.

சிங்கப்பூர் ''சாங்கி'' விமான நிலையத்தில் நடை பெறும் தீவிர பரிசோதனை பற்றி இவர்களுக்கு அவ்வளவாகத் தெரிவதில்லை. போலியான சிங்கப்பூர் பாஸ்போட்டுக்களைப் பயன்படுத்தினார்கள் என்று கண்டு பிடிக்கப்பட்டுக் குற்றவாளிகளாகக் காணப்படுவோர் கடுமையானசிறைத் தண்டனையை அனுபவிக்கின்றார்கள்.

இந்த நடவடிக்கைகள் யாவும் உண்மையிலேயே அப்பாவிகளான இலங்கைப் பயணிகளைப் பாதிக்கின்றன என்பது கவலைக்குரியதாகும், இந்தப் போலிகளின் வாக்குறுதிகளை நிராகரித்து பயண ஆவணங்கள் சரியானவை என்பதை உறுதிசெய்துகொள்ளுமாறு சகல இலங்கையர்களுக்கும் கூறுகிறோம். 1992 இல் 428 இலங்கையர்கள் ஒழுங்கீனமான பயண ஆவணங்களை வைத்திருந்த காரணத்தால் விமான மேறாமல் தடுக்கப்பட்டனர்.

சிலவேளைகளில் தரகர்கள் போலிப் பாஸ்போட்டுகளை வழங்குவதில் தாமதமேற்படுத்துகின்றனர் அல்லதுபாஸ்போட்டுக்களுக்கு அதிக பணம் பெறுவதற்காக அகதிகளாகச் செல்வோரை வேலை செய்ய நிர்ப்பந்திக்கின்றனர் தகுதியான வேலை செய்ய அனுமதிப் பத்திரமின்றி சிங்கப்பூரில் வேலை செய்து கண்டு பிடிக்கப்படும் அகதிகளுக்கு சிறைத் தண்டனை மட்டுமல்ல பிரம்படியும் கிடைக்கிறது.

### யாழ். போதனா வைத்தியசாலைக்கு

## புற்றுநோய் வைத்தியரை நியமிக்க அனுமதி

(யாழ்ப்பாணம்)

புற்றுநோய் சம்பந்தமான விசேட வைத்தியர் ஒருவரை யாழ் போதனா வைத்தியசாலையில் பகுதி நேரமாக நியமிக்க வைத்தியசாலைகளின் தலைமைப் பணிமனை அனுமதி வழங்கியுள்ளதாக யாழ் போதனாவைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதற்கமைய தற்சமயம் கொழும்பில் தங்கியிருக்கும் புற்று நோய் விசேட வைத்தியரான திருமதி பிள்ளை என்பவரை யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாதம் இரண்டு தடவை வந்து சிகிச்சையளிக்கும்படி கேட்பதற்கு முயற்சிகள் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டது,

இவரை கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் கூட்டி வந்து கூட்டிச் செல்ல சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உதவிபுரிய முன்வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் மேற்படி வைத்தியருக்கு கடிதம் ஒன்றின் மூலம் அழைப்பு விடுக்கப்படவுள்ளதாக அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. [ரப]

### சுதந்திர

கட்டங்களில்கட்சிக்காக தான் ஆற்றிய அளப்பரிய பங்களிப்பினை சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரும் ஐக்கிய தேசியக் கட்சியினரும் நன்கறிவார்கள்.

பொதுநலவாய அமைப்பு நாடுகளில் தான் இளம் எதிர்க் கட்சித்தலைவராக 1983இலிருந்து 1988வரை கடமையாற்றியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தக் காலகட்டத்தில் மூன்று இடைத்தேர்தல் பிரசாரங்களை வழிநடத்திச் செல்லும் பொறுப்பு தம்மிடம் ஒப்படைக்கப்பட்டதென்றும் இரண்டு இடைத்தேர்தல்களில் கட்சி வெற்றியீட்டி பலம் மிக்க ஐக்கிய தேசியக் கட்சி பிரசாரத்தை எதிர்நோக்க வேண்டியதுமல்லாமல் திருமதி சந்திரிகா குமாரணதுங்க அவரது கணவர் ஆகியோர் தலைமையிலான மக்கள் கட்சியினரின் முட்டுக்கட்டைகளையும் அவமதிப்புக்களையும் எதிர்நோக்கவேண்டியிருந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

மின்னேரிய இடைத்தேர்தலில் திருமதி குமாரணதுங்க எம் அவரது கணவரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிமீதும் தனது தாயார் மீதும் ஏற்படுத்திய அவமரியாதையை சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளர் நாயகம் நன்கறிவார்.

கட்சியிலிருந்து தம்மை இடைநிறுத்தி வைத்து 89 நாட்கள் கடந்துவிட்டன. ஆனால் எதற்காக தான் இடைநிறுத்தி வைக்கப்பட்டேன் என்பது குறித்து இன்னமும் அறிவிக்கப்படாமல் இருக்கின்றது என்று அவர் குறிப்பிட்டார். குற்றச்சாட்டுப்பத்திரம் இன்னும் அனுப்பப்படவில்லை.

ஜே. வீ. பியினரின் கிளர்ச்சி, விடுதலைப் புலிகளின்

### ராஜினாமா

துள்ளார்.

இதேவேளை இராஜினாமாவைத் தொடர்ந்து அநுரா பண்டாரநாயக்காவின் எதிர்கால நடவடிக்கை என்ன? என இதுவரை முடிவு செய்யவில்லை என்றும் இவரது முடிவை சுதந்திரக்கட்சியின் தலைமைப்பீடம் அவதானித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஆதாரம்காட்டி பெறவும்

1993-6ஆம் மாதப் பகுதியில் கிளாலியிலிருந்து முச்சக்கர மோட்டார் வண்டி மூலம் யாழ்ப்பாணம் வந்த பயணிகளால் வண்டியில் தவறவிடப்பட்டசில பாவனைப் பொருள்கள் முச்சக்கர மோட்டார் வண்டி சேவை சங்க காரியாலயத்தில் உள்ளது. உரியவர்கள் ஆதாரங்களுடன் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளனர்.

## ஒத்திவைப்பு

இன்று நடைபெறவிருந்த பண்டத்தரிப்புக்கோட்டமட்டத்திலானஆங்கிலதினப் போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. அதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்அறிவித்துள்ளார்

### புலனாய்வு

தலைப் புலிகளுக்கு கிடைக்கச் செய்தனர். ஆனால் நான் பருத்தித்துறையில் போய் இறங்கியபோது பொதுமக்களும் விடுதலைப் புலிகளும் பாரிய ஒரு தாக்குதலை எதிர்கொள்ள ஆயத்தமாகிக் கொண்டிருந்ததை கண்டேன் என்றும் சேனாதீர குறிப்பிட்டுள்ளார்.

பலாலியிலிருந்தும், ஆனையிறவிலிருந்தும் நாம் இராணுவத்தின் பெரும் தாக்குதலை எதிர்பார்த்து இருக்கின்றோம் என என்னிடம் விடுதலைப் புலிகளின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். உங்கள் ஜனாதிபதி இலங்கையில் இனப்பிரச்சினையில்லை பயங்கரவாதப் பிரச்சினையே உள்ளது என்று கூறியது முதல் நாம் இந்த போருக்கான எதிர்பார்ப்புடன் ஆயத்தங்களை மேற்கொண்டுள்ளோம். அத்துடன்ஆனையிறவுக்கும், பலாலிக்கும் படைகள் தாக்குதலுக்காக நகர்த்தப்பட்டு வருவது குறித்த முக்கிய தகவல்களையும் பெற்றுள்ளோம் என்றும் அந்த விடுதலைப்புலிகள் உறுப்பினர் என்னிடம் கூறினார்.

விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவு சிறப்பாக செயல்படுகின்றதுஎன்பதையே யாழ்தேவி நடவடிக்கையில் ஏற்பட்ட படைஇழப்பு காட்டுகின்றதுஎனசுகீஸ்வரசேனாதீர தனது செய்திக் கட்டுரையில் எழுதியுள்ளார்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 11-10-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 11150

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

43 4045, 24-6811, 27 4673, 27-2761, 26-0525
20-7542, 26-7272, 41-7975, 27-2088, 27 5187
28-9259, 24-0515, 26 5517, 26-5777, 43 4065
41 9652, 27-5670. 28-1799, 26-2585, 24 6431
24 5416.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-8353, 26-1583, 24-3262, 42-3815, 27-5907
26-3146, 24-9744, 24 8631, 28 2212, 42-3514
26-4874, 26-2502, 40-7584, 24-6439, 28-0882
24 1250, 26-0032, 26-7187, 28 3735, 41-0849
28-0523, 24-4153, 24-4457, 26-4610.

வீழ்ந்து இளைஞர் ஒருவர் மரணமானார்.

இச்சம்பவம் அம்பன் என்னுமிடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அம்பனைச் சேர்ந்த குண தென்னை மரத்தில் ஏறிக் கொண்டிருந்தபோது, தவறிவீழ்ந்து மரணமானவராவார்.

(36), (யோ

---

# தன்னியக்க சிலிண்டர் இயந்திர இயக்குநர் தேவை

தன்னியக்க சிலிண்டர் இயந்திர (ORIGINAL HEIDELBERG CYLINDER) இயக்குநர் தேவை. முன் அனுபவச் சான்றிதழ்களுடன் 15-10-93 காலை 10-00 மணிக்கு நேரில் வரவும்.

**ஈழநாதம்**
**31, மகேந்திரா வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(இ)

---

# 47-ம் நாள் நெஞ்சவருடல்



தாயின் மடியில்:

1974-07-01

தாயக மீட்பில்:

1993 08 27

சுழிபுரத்தில் விமான எதிர்ப்புத் தாக்குதலின்போது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட

## 2-ம் லெப். மருதவாணன் (உத்தமன்)
## [இரத்தினசிங்கம் அறிவழகன்

அழியாத ஓவியமே
மண்ணுக்காக நீ
அகம் மகிழ்ந்து முகம் மலர
புதைகுழியல் வித்தானாயோ

இவருடன் வீரச்சாவடைந்த ஏனைய இரு போராளிகளினதும் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

எமது இல்லத்தில் 12 10 93 செவ்வாய்க்கிழமை நடைபெறும் மதியபோசனத்தில் சகபோராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைககிறோம்.

இவரது பிரிவால் துயருறும்

ஏழாலை மேற்கு, அப்பா, அம்மா, அக்கா,
ஏழாலை. தங்கை, உறவினர், நண்பர்கள்.

(6269)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

---

முன்தினம் இடம்பெற்றது.

இறங்கு துறையை அண்டிய பகுதியில் காணப்பட்ட இப்பால்மா ரின்கள் குறித்து சந்தேகம் கொண்டு அதனைப் பரீட்சித்தபோது அவற்றினுள் நெஸ்பிறேபால்மா இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. 'யாழ் தேவி' படையினரே இவற்றை கைவீட்டுச் சென்றிருக்க வேண்டும் என நம்பப்படுகிறது. [86]

**வீதிகளில்**

யாளருக்கு சிரமத்தையும், தேவையற்ற விபத்துக்களையும் ஏற்படுத்துகின்றன. நகரத்தில் எமதுசுத்திகரிப்பு பணிகளும் பாதிக்கபபடுகின்றன. எரிபொருள் பற்றாக்குறை, வாகன பற்றாக்குறை இருந்தும் மாநகரசபை நகர்ப்புற சுத்திகரிப்புச் சேவையை இயன்றளவு செய்து வருகின்றது. கொலரா பரவும் காலத்தில் நீர் விநியோகம், அத்தியாவசிய சுத்திகரிப்புப் பணிகளுக்கு வாகனத் தேவை மிகவும் முக்கியமாகின்றது ஆகையால் வீடுவளவுகளில் வெட்டப்படும் மரக்கிளைகள், செடிகளை வீதியோரத்தின் பொது இடங்களில் போடவேண்டாம் என நகர மக்களுக்கு மீண்டும் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

இதனையும் கவனமெடுக்காமல் வீதிகளையும், பொது இடங்களையும் அசுத்தம செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

திகளை நிராகரித்து பயண ஆவணங்கள் சரியானவை என்பதை உறுதிசெய்துகொள்ளுமாறு சகல இலங்கையர்களுக்கும் கூறுகிறோம். 1992 இல் 428 இலங்கையர்கள் ஒழுங்கீனமான பயண ஆவணங்களை வைத்திருந்த காரணத்தால் விமான மேறாமல் தடுக்கப்பட்டனர்.

சிலவேளைகளில் தரகர்கள் போலிப் பாஸ்போட்டுகளை வழங்குவதில் தாமதமேற்படுத்துகின்றனர் அல்லதுபாஸ் போட்டுக்களுக்கு அதிக பணம் பெறுவதற்காக அகதிகளாகச் செல்வோரை வேலை செய்ய நிர்ப்பந்திக்கின்றனர் தகுதியான வேலை செய்ய அனுமதிப் பத்திரமின்றி சிங்கப்பூரில் வேலை செய்து கண்டுபிடிக்கப்படும் அகதிகளுக்கு சிறைத் தண்டனை மட்டுமல்ல பிரம்படியும் கிடைக்கிறது.

கடந்த வருடம் போலிக் கடவுச்சீட்டை எதிர் நோக்கிக் கொண்டிருந்த நாற்பதுக்கு மேற்பட்ட இலங்கையர்களை பொலிசார் கைது செய்தனர். பொலிசாரின் பிடியிலிருந்து தப்புவதற்காக ஆறாவது மாடியிலிருந்து குதித்த இலங்கையுவதியொருவர் மரணத்தைத் தழுவிக்கொண்டார் என சிங்கப்பூர் விமானநிலைய புலனாய்வு பாதுகாப்பு சேவை பிரைவேற் லிமிடெட் இது தொடர்பாக விடுத்துள்ள தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது

அவமதிப்புக்களையும் எதிர்நோக்கவேண்டியிருந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

மின்னேரிய இடைத்தேர்தலில் திருமதி குமாரணதுங்க வும் அவரது கணவரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிமீதும் தனது தாயார் மீதும் ஏற்படுத்திய அவமரியாதையை சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளர் நாயகம் நன்கறிவார்.

கட்சியிலிருந்து தம்மை இடைநிறுத்திவைத்து 89 நாட்கள் கடந்துவிட்டன. ஆனால் எதற்காக தான் இடைநிறுத்திவைக்கப்பட்டேன் என்பது குறித்து இன்னமும் அறிவிக்கப்படாமல் இருக்கின்றது என்று அவர் குறிப்பிட்டார். குற்றச்சாட்டுப்பத்திரம் இன்னும் அனுப்பப்படவில்லை.

ஜே. வி. பியினரின் கிளர்ச்சி, விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல் ஆகியவற்றிற்கு மத்தியில் 88இல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் சிறிமாவோ பண்டாரநாயகா போட்டியிட்டபோது தேர்தல் பிரசாரத்திற்கு தலைமை தாங்கி நாட்டின் பல பகுதிகளிலும் தான் உரையாற்றியதாக அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார். தனது திறமையை, ஆற்றலை ஏற்றுக்கொள்ளாதவர் கட்சியில் தான் ஏன் இன்னமும் இருக்க வேண்டுமென்று திரு. அநுரா பண்டாரநாயகா வினாவியுள்ளார்.

---


# நியூ இன்டோ சைனீஸ்

**நூடில்ஸ்**
**கோழி புரியாணி**
**(f) பிறைட் றைஸ்**

*Beer, Stout & Local Arrack*

**பிறந்தநாள், பிரியாவிடை, திருமண வைபவங்களுக்கான சிற்றுண்டி, மேலைத்தேய, கீழைத்தேய உணவு வகைகளுக்கும் மற்றும்**

## சைனீஸ் உணவு வகைகள்

அனைத்தையும் நண்பர்களுடனும், குடும்பத்துடனும் உண்டு மகிழ அமைதியான, பாதுகாப்பான சூழலில் உங்களை வரவேற்கின்றது.

**சைனீஸ் உணவு வகைகளுக்கு தனித்துவம் வாய்ந்தவர்கள்**

## நியூ இன்டோ சைனீஸ்
**111/4, மடம் வீதி, யாழ்ப்பாணம்.**

(சி-7583)


---

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 11-10-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 11150

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

43 4045, 24-6811, 27 4673, 27-2761, 26-0525
20-7542, 26-7272, 41-7975, 27-2088, 27 5187
28-9259, 24-0515, 26 5517, 26-5777, 43 4065
41 9652, 27-5670, 28-1799, 26-2585, 24 6431
24 5416.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-8353, 26-1583, 24-3262, 42 3815, 27-5907
26-3146, 24-9744, 24 8631, 28 2212, 42-3514
26-4874, 26-2502, 40-7584, 24 6439, 28-0882
24 1250, 26-0032, 26-7187, 28 3735, 41-0849
28-0523, 24-4153, 24-4457, 26 4610.

---

# மரண அறிவித்தல்



## தம்பிமுத்து - கணேசன்

(தர்சினி மின்னகம் உரிமையாளர், கொடிகாமம் )

அச்சுவேலி வடக்கை பிறப்பிடமாகவும், கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட த. கணேசன் அவர்கள் நேற்று (11-10 93) காலமானார். இவர் திரு. திருமதி தம்பிமுத்து, செல்லாச்சி அவர்களின் அருமை மகனும், சௌபாக்கியபதியின் அன்பு கணவரும், யசோதரா (யா/கொடிகாமம், திருநாவுக்கரசு மகாவித்தியாலயம் ஆசிரியை), சுரேஷ் (தர்சினி மின்னகம்), ரோகினி, பிரகலாதன் ஆகியோரின் அருமை தந்தையுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 11 மணியளவில் கொடிகாமம் கட்டைபறித்தான் மயானத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

கண்டி வீதி, மகன் சுரேஷ்
கொடிகாமம். (6270)